DEPOSITION OF WITNESS
(Chapter XX III Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
RAMANATHAPURAM
CASE NO: C.C. 42/2008
Deposition of witness for prosecution -PW-9

Name	:	திரு. லெட்சுமனன்
Father Name	:	திரு. முத்து இருளப்ப தேவர்
Village	:	கடலாடி
Taluk	:	கடலாடி
Calling	:	ராம்கோ உதவியாளர் ஓய்வு
Religion	:	இந்து
Age	:	72

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23th day of November 2021.

முதல் விசாரணை :-

நான் ராம்கோ கமுதி மெயின் கிளையில் உதவியாளர் ஆக பணிபுரிந்து 2006 ஆம் வருடம் ஓய்வு பெற்று தற்போது கடலாடியில் குடியிருந்து வருகிறேன். 2002,2003 ஆம் வருடம் நானும் என்னுடன் சேது , இளங்கோ ஆகியோரும் கமுதி கிளையில் பணியாற்றினோம். தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கிடங்கிலிருந்து அத்தியாவசிய பொருட்கள் நகர்வு செய்யபட்டு ஆனையூர் நியாய விலைக்கடைக்கு கொண்டு செல்லப்பட்டது. அந்த கடையின் விற்பனையாளர் வாசுதேவன் என்பவரிடம் பொருட்களை ஒப்படைத்து கையொப்பம் பெற்று அதன் இன்வாய்ஸ்கள் சம்பந்தபட்டவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேற்சொன்ன விற்பனையாளர் விற்பனை செய்த பணத்தை சங்கத்திற்கு இருசால் செய்யாமல் கையாடல் செய்துவிட்டதாக கூட்டுறவு துறை விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தபோது தெரிந்து கொண்டேன். விற்பனையாளரிடம் ஒப்படைக்கப்பட்ட இன்வாய்ஸ்களில் நானும் கையொப்பம் போட்டேன். அந்த இன்வாய்ஸ்கள் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படுவ்துதான்.ஆகும்,. அது அ.த.சா.21 (எண்ணிக்கை 09) ஆகும். இது சம்பந்தமாக விசாரணை அதிகாகரி விசாரணை பெற்று என்னிடம் வாக்குமூலம் வாங்கினார். அது தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் வாக்குமூலம் தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அ.த.சா. 22 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள். நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் கு.வி :-

என்னால் கொடுக்கப்பட்ட ரசீதுகளுக்கு உண்டான பணத்தை விற்பனையாளர் கூட்டுறவு வங்கியில் தான் பணம் செலுத்துவார் என்றால் சரிதான். அதற்குண்டான பணத்தை விற்பனையாளர் செயலாளரிடம் கொடுத்துவிடுவார். செயலாளர் அதனை வங்கியில் செலுத்துவார். அ.த.சா. 22 ஐ யார் எழுதினார்கள் என்று தெரியாது . கையொப்பம் மட்டும் நான் போட்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS
(Chapter XX III Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
RAMANATHAPURAM
CASE NO: C.C. 42/2008
Deposition of witness for prosecution -PW-8

Name	:	திரு. சோனை முத்து
Father Name	:	திரு. சமையமுத்து
Village	:	பரமக்குடி
Taluk	:	பரமக்குடி
Calling	:	சரக மேற்பார்வையாளர் ஓய்வு
Religion	:	இந்து
Age	:	75

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23th day of November 2021.

முதல் விசாரணை :-

நான் 2005 ல் திருவாடனையில் கூட்டுறவு வங்கியில் மேலாளராக இருந்து பணி ஓய்வு பெற்றேன். 16.07.2002 முதல் 21.06.2004 வரை கமுதி சரக மேற்பார்வையாளர் ஆக பணிபுரிந்தேன். கமுதி கூட்டுறவு சங்கத்தில் கட்டுப்பட்ட 4 நியாய விலைக்கடைகளில் ஆனையூர் கடை என் கட்டுப்பாட்டில் இருந்தது. என்னுடைய கடமை கடன் வழங்குதல், வசூல் பன்னுதல், மத்திய வங்கிக்கு புள்ளி விவரம் அனுப்புதல், சங்கங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்குதல், அவைகளை விற்று முறையாக பணத்தை செலுத்தியிருக்கிறார்களா என்று சரிபார்ப்பது ஆகும். ஆஜர் எதிரிதான் ஆனையூர் நியாய விலைக் கடையின் விற்பனையாளர். நான் அந்த கடையில் சென்று சரிபார்த்த போது குறைபாடு சுமாராக ரூ.1,25,131 வரை குறைபாடு இருந்தது. அதனை உடினயாக செலுத்தவேண்டும் என்று அவரிடம் கூறி வங்கி அதிகாரிக்கும் செயலாளருக்கும் கடிதம் ஒன்று அனுப்பினேன். இது சம்பந்தமாக மைய வங்கிக்கும் வட்ட கழக மேலாளருக்கும் கடிதம் அனுப்பினேன். நிலுவைத் தொகை அதிகமாக இருந்ததால் அவர்களுக்கு அனுப்ப வேண்டிய காசு கடன் அனுமதியை நிறுத்திவிட்டு சொந்த பணத்தில் பொருட்களை வாங்கி விற்பனை செய்ய உயர் அதிகாரியை பரிந்துரை செய்தேன். இது சம்பந்தமாக 02.09.2002 ல் துணை பதிவாளர் /தலைமை நிர்வாக அதிகாரி RDCC வங்கிக்கு எழுதிய கடிதம் அ.த.சா.18 ஆகும். 17.10.2002 ல் துணை பதிவாளர் /தலைமை நிர்வாக அதிகாரி RDCC வங்கிக்கு எழுதிய கடிதம் அ.த.சா.19 ஆகும். 25.05.2003 ல் துணை பதிவாளர் /தலைமை நிர்வாக அதிகாரி RDCC வங்கிக்கு எழுதிய கடிதம் அ.த.சா.20 ஆகும்.
இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் கு.வி :-

நான் என் கட்டுப்பாட்டிலுள்ள 4 கடைகளுக்கு மேற்பார்வை செய்ய போவேன் என்றால் ஆமாம். மேற்கண்ட கடைகளுக்கு செயலாளர் முழு பொறுப்பு

என்றால் சரிதான் . விற்பனையாளருக்கும் எனக்கும் நேரடியாக தொடர்பு இல்லை என்றால் சரிதான். எனக்கு தனிப்பட்ட முறையில் முத்திரை ஏதும் இல்லை. நான் எழுதிய கடிதத்தில் எந்தந்த தேதியில் எவ்வளவு குறைபாடுகள் ஏற்பட்டிருக்கிறது என்று கூறினேனா என்றால் இல்லை. என்னால் அனுப்பப்பட்ட கடிதங்கள் அனைத்தும் கையால் எழுதப்பட்ட கார்பன் தாளில் அதில் என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த கடிதங்களில் கார்பனால் எழுதப்பட்டது ஆனால் அதில் பேனாவால் கையொப்பமிடப்பட்டது என்றால் நான் கார்பனில் எழுதியிருந்தாலும் தனியாக தான் பேனாவில் போடுவேன். அ.த.சா.ஆ.18, 19, 20 ஆகிய கடிதங்களில் கார்பன் தாளில் பேனாவில் கையொப்பம் போடப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு தான் கையொப்பம் போடுவேன். கணக்கு புத்தகங்களில் கூட்டுறவு சங்கத்தால்தான் வழங்கப்பட்டது என்று முத்திரை இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விற்பனை சம்பந்தமாக பொது பதிவேடு குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் ் முறையாக எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும் மோசடி அனைத்தும் உயர் அதிகாரிகளால் ஏற்பட்டது என்றால் இல்லை. நான் சொல்வதை போல் எதிரி எந்தவிதமான தவறு செய்யவில்லை என்றாலும் இந்த ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரணை செய்தபோது பொய்யாக வாக்குமூலத்தை தான் கூறினேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XX III Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
RAMANATHAPURAM
CASE NO: C.C. 42/2008
Deposition of witness for prosecution -PW-7

Name	:	திரு. அம்புரோஸ்
Father Name	:	திரு. செபஸ்தியன்
Village	:	பரமக்குடி
Taluk	:	பரமக்குடி
Calling	:	மேற்பார்வையாளர் ஓய்வு
Religion	:	இந்து
Age	:	70

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23rd day of November 2021.

முதல் விசாரணை :-

நான் பரமக்குடி தொ.வே.கூ வங்கியில் மேலாளராக பணிபுரிந்து 2010 ஆம் வருடம் ஓய்வு பெற்று தற்போது உலகமனியேந்தல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். 16.07.1995 முதல் 22.07.2008 வரை கமுதி சரகத்தில் சரக மேற்பார்வையாளர் ஆக இருந்தேன். கூட்டுறவு வங்கிகளில் இருந்து க்டன் மனுக்கள் தயாரிக்கப்பட்டு எனக்கு வரும் . நான் அதை சரிபார்த்து மத்திய கூட்டுறவு வங்கிக்கு பரிந்துரை செய்வது என்னுடைய வேலை. மேலும் கூட்டுறவு வங்கிக்கு வசூல் செய்யவேண்டிய தொகைகள் எதுவும் இருப்பின் அதை வசூல் செய்து கொடுப்பது எனது கடமையாகும். எங்களுடைய சரகத்தில் 30 நியாய விலைக் கடைகள் கட்டுப்பாட்டில் இருந்தன. கமுதி சங்கத்தில் 4 கடைகள் கட்டுப்பாட்டில் இருந்தது. வழக்கமாக சங்க் செயராளர்கள் நிர்வாகத்தில் இருந்து ஆதார அறிக்கை தயார் செய்து கொடுப்பது வழக்கம். அதனை நான் சரிபார்த்து ராம்கோ இன்வைசுக்கு மீண்டும் பொருட்களை சங்கத்திலிருந்து விற்பனையாளருக்கு அனுப்புவதற்காக அனுப்பி வைத்தேன். அப்படி 30 நியாய விலைக்கடைகளுக்கும் தேவையான பொருட்களை பிரித்து அனுப்பி வைப்பேன். அவ்வாறு அனுப்பப்பட்ட நியாய விலைக் கடை குறித்து செயலாளரிடம் சொல்லி பணத்தை செலுத்த சொல்லுவேன். இந்த வழக்கில் ஆனையூர் நியயாய விலைக் கடையில் வாசுதேவன் வங்கியில் செலுத்தாதை செயராளரிடம் சொன்னேன். பின்னர் நான் அங்கிருந்து பணி மாறுதல் ஆக சென்று விட்டேன். இது சம்பந்மாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் கு.வி :-

பொதுவாக இது போன்ற விற்பனை கடைகளுக்கு செயலாளர் தான் மு ழு பொறுப்பு என்றால் அவர் நிர்வாகத்திற்கு முழு பொறுப்பு ஆவார். எந்தந்த கடைகளில் எவ்வளவு பற்றாக்குறை என்று என்னால் குறிப்பிட்டு சொலலமுடிறயாது என்றால் சரிதான். எனக்கு விற்பனை கடைகளில் தணிக்கை செய்யும் அதிகாரம் உள்ளது என்றால் அதிகாரம் இருக்கிறது. நான் ஆஜர் எதிரியின் கடைக்கு தணிக்கை

சென்றேன். ஆனால் அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை. அதனால் எதிரி என்ன செய்தார் ஏது செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் ஆய்வுக்கு செல்லும்பொது அவர் ஆவணங்களை சரியாக வைத்திருப்பார். போலீசார் என்னை விசாரணை செய்தபோது மேற்சொன்னவாறு கூறினேன் என்றால் ஆமாம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XX III Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
RAMANATHAPURAM
CASE NO: C.C. 42/2008
Deposition of witness for prosecution -PW-6

Name	:	திரு. செல்வராஜ்
Father Name	:	திரு. நீலமேகம்
Village	:	கமுதி
Taluk	:	கமுதி
Calling	:	செயலாளர் ஓய்வு
Religion	:	இந்து
Age	:	68

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23th day of November 2021.

முதல் விசாரணை :-

நான் கமுதி கூ.தொ.வே. வங்கியில் செயலாளராக பணியிலிருந்து 2011 ஆம் வருடம் ஓய்வு பெற்று தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 2000 ஆம் வருடம் செயலாளராக இருந்த போது மு.மு.ஜே.6/45795/2000 18.07.2000 செயல்முறை ஆனையின் படி கமுதி வட்டம் ஆனையூர் தொ.வே.கூ வங்கிக்கு ஆனையூர் , புனவாசல் , வல்லக்குளம், வங்காருபுரம் ஆகிய நான்கு நியாய விலைக்கடைகள் எங்களுக்கு மாற்றி ஆனையிடப்பட்டது. அந்த செயல் முறை ஆனை அ.சா.14 ஆகும் .10.07.2001 முதல் ஆஜர் எதிரி வாசுதேவனை தற்காலிக பணியாளராக நியமனம் செய்யப்பட்டார். அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட தீர்மான புத்தகத்தின் பக்கம் 160 லுள்ள பதிவு அ.த.சா. 15 ஆகும் . 15.10.2002 ல் வாசுதேவன் நியாய விலைக்கடையில் விற்பனை செய்த பொருட்களுக்கு பணம் கட்டாததால் ஒரு குறிப்பாணை வழங்கினேன். அந்த குறிப்பாணை அ.த.சா. 16 ஆகும். அதனடிப்படையில் 25.11.2002 ல் அவர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்படடார். 30.11.2002 ல் மீண்டும் பணம் கட்டாததால் நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்டார். எதிரி வாசுதேவன் ஆனையூர் நியாய விலைகடையில் ரூ.1,19,890 செலுத்தாமல் இருந்தார் . நான் விசாரணை அதிகாரியிடம் நடந்தவற்றை சொன்னேன். அதை எழுதினார் . நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் 31.03.2006 தேதியிட்ட வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான் அது அத.சா.17 ஆகும் . போலீசார் என்னைவிசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் கு.வி :-

செயலாளர் என்ற முறையில் நான் நியாய விலைக் கடைகளுக்கு முழு பொறுப்பு என்றால் சரிதான். சிறப்பு அதிகாரி அவர்களை விற்பனையாளராக நியமிப்பார் .பின்னர் அவர்கள் என்னுடைய கட்டுப்பாட்டில் வருவார்கள் என்றால் சரிதான். ஆனையூர் நியாய விலைக் கடையில் விற்பனையாளரான எதிரி முறைகெடு செய்கிறார் என்று ஏதாவது புகார் வந்ததா என்றால் இல்லை. தனி அதிகாரி என்னிடம் ஏதாவது

ஆவணம் கொடுத்தாரா என்றால் இல்லை. அறிக்கை மட்டும் கொடுத்தார். எவ்வளவு தொகையிலிருந்து எவ்வளவு தொகை கட்டவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் விற்பனை பதிவேட்டை பார்த்து நான் சொன்னேன். கூ. சங்கத்தில் தான் கொடுக்கப்பட்ட ஆவணங்கள் முத்திரை செலுத்தப்பட்டதா என்றால் இல்லை. பற்றாக்குறை தொகையின் கீழ் நாங்கள் எதுவும் முத்திரை இடவில்லை என்றால் சரிதான். அ.த.சா.16 பேனாவில்தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் சாதாரணமான வெள்ளை தாளில் தான் எழுதிக் கொடுத்தேன் என்றால் ஆமாம். நான் யார் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தேன் என்று பதவி அதில் குறிப்பிடப்படவில்லை என்றால்சரிதான். தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட ஆனையிலும் நிரந்தர மான பணி நீக்கம் செய்யப்பட்ட ஆனையிலும் கையொப்பம் பெறவில்லை என்றால் ஆமாம். எதிரி எந்த விதமான தவறும் செய்யவில்லை என்றாலும்மேல் அதிகாகரி செய்த தவறை செயலாளர் என்ற முனையில் எதிரி மீது பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்களால் தாக்கல் செய்யயப்பட்ட நோட்டு புத்தகங்கள் அனைத்தும் சாதாரண கடையில் வாங்கி தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XX III Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
RAMANATHAPURAM
CASE NO: C.C. 42/2008
Deposition of witness for prosecution -PW-5

Name	:	திரு. இளங்கோவன்
Father Name	:	திரு. சுந்தரசாமி
Village	:	கமுதி கோட்டைமேடு
Taluk	:	கமுதி
Calling	:	துணை பதிவாளர் ஓய்வு
Religion	:	இந்து
Age	:	65

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23th day of November 2021.

முதல் விசாரணை :-

நான் தற்போது 2014 ல் சேலத்தில் துணை பதிவாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 08.04.2002 லிருந்து 07.03.2003 வரை கமுதி கூட்டுறவு விரிவாக்க அலுவராக பணியிலிருந்தேன். அந்த சமயத்தில் கமுதி தொ.வே.கூ வங்கியில் 18.05.2002 முதல் 16.02.2003 வரை கூடுதல் பொறுப்பு தனி அலுவலராக இருந்தபோது கமுதி கூ.வே.சங்கத்தில் அனைத்து நிர்வாகத்தையும் நான் தான் கூடுதல் பொறுப்பாக கவனித்து வந்தேன். அப்போது செயலாளராக செல்வராஜ் என்பவர் இருந்தார். சங்க கட்டுப்பாட்டில் 4 நியாய விலைக் கடைகள் இருந்தன. ஆஜர் எதிரியை தெரியயும். அவர் ஆனையூர் நியாய விலைக் கடையில் விற்பனையாளராக இருந்தார். அவர் விற்பனை செய்த தொகையை சரியான முறையில் சங்கத்தில் இருசால் செய்யாமல் இருந்ததால் 07.11.2002 ல் நான் விரைவுக் குறிப்பாணை வழங்கினேன். அந்த விரைவுக் குறிப்பாணை அ.சா.10 ஆகும். அதன் பின்னரும் பணத்தை இருசால் செய்யவில்லை. அதனால் 25.11.2002 ஆம் தேதி அவரை தற்காலிக பணி நீக்கம் செய்தேன். அந்த தற்காலிக பணி நீக்கம் உத்தரவு அ.சா.11 ஆகும். அதன் பின்னரும் அவர் பணத்தை இருசால் செய்யவில்லை. அவர் 30.11.2002 ஆம் தேதி அவரை நிரந்தர பணி நீக்கம் செய்து தீர்மானம் ஏற்றினேன். அந்த தீர்மானம் அ.த.சா.12 ஆகும். ஆனையூர் நியாய விலைக் கடையின் விற்பனையாளர் பொறுப்பு பதிவேட்டின் படி அவர் இருசால் செய்ய வேண்டிய தொகை ரூ.1,19,890 ஆகும். அதாவது ஆனையூர் நியாய விலைக் கடையில் பொருட்களை ஒப்படைத்து அதனை விற்பனை செய்து சங்கத்தில் இருசால் செய்தது போக மீதி செலுத்த வேண்டிய தொகை ஆகும் 18.06.2004 ஆம தேதியிட்ட வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் அ.த.சா.13 ஆகும். இது சம்பந்தமாக விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார். மேற்கூறியவாறு கூறினேன்.

எதிரி தரப்பில் கு.வி :-

நான் தனி அதிகாரி என்பதால் பொறுப்புகள் அதிகம் என்பது என்றால் சரிதான். எனக்கு தற்காலிக அந்த பொறுப்பு வழங்கப்பட்டது. தினசரி கடைகளில் ஆய்வு செய்ய வேண்டும் என்பது எங்கள் பணி என்றால் இல்லை. புகார் ஏதேனும் வந்தால் விசாரணை செய்யலாம் என்றால் சரிதான். ஆனையூர் நியாய விலைக் கடைகளில் பகுதியிலிருந்து ஏதேனும் புகார் வந்ததா என்றால் இல்லை. நியாய விலைக்கடைக்கு தலைவரும் செயலாளரும் தான் பொறுப்பு என்றால் இல்லை. அந்த கடையின் விற்பனையாளர் தான் பொறுப்பு ஆவார். நான் முறையீட்டை நேரடியாக பார்க்கவில்லை என்றால் ஆமாம். விற்பனை செய்த பொருட்களின் பணத்தை விற்பனையாளர் செயலாளரிடம் கொடுக்க வேண்டும் . அவர்தான் அந்த பணத்தை இருசால் செய்யவேண்டும் . பற்றாக்குறை குறித்து செயலாளருக்கும் ஒரு நகல் அனுப்புவார்கள் என்றால் ஆமாம் . பொறுப்பு பதிவேடு ஆவணம் சங்கத்தால் தான் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த ஆவணம் எங்கள் அலுவலகத்தால் கொடுக்கப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. பற்றாக்குறையான ரூ.1,19,890 முழுத் தொகை எவ்வளவு , அவர் செலுத்திய தொகை எவ்வளவு, பற்றாக்குறை எவ்வளவு என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணத்தை பரிசீலனை செய்த அதிகாரியின் கையொப்பமுடன் முத்திரை ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. விசாரணை அதிகாரியிடம் கொடுக்கப்பட்ட வாக்குமூலமானது பேனாவில்தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என் முன்னிலையில் தான் விசாரணை செய்யப்பட்டது என்றோ , யார் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பேனாவில் மட்டும் வாக்குமூலத்தின் முன்பகுதி எழுதப்பட்டுள்ளது- மேற்சொன்ன வாக்குமூலமானது எதிரியின் மீது வழக்கு போடுவதற்காக பின் தேதியிட்டு தயாரிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேல் அதிகாரி செய்த தவறை மறைப்பதற்காக நான் இங்கு வந்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XX III Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
RAMANATHAPURAM
CASE NO: C.C. 42/2008
Deposition of witness for prosecution -PW-4

Name	:	திரு. செந்தில்குமார்
Father Name	:	திரு. சுப்பையா
Village	:	திண்டுக்கல்
Taluk	:	திண்டுக்கல்
Calling	:	கூட்டுறவு தணிக்கை அலுவலர்
Religion	:	இந்து
Age	:	48

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23th day of November 2021.

முதல் விசாரணை :-

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு தணிக்கை அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2002 ஆம் வருடம் இளநிலை தணிக்கையாளராக திண்டுக்கல்லில் பணியிலிருந்த போது சிறப்பு பணியாளராக கூட்டுறவு தணிக்கை இயக்குநர் மதுரை மண்டலம் அவர்களின் உத்தரவுப்படி கூட்டுறவு தணிக்கை இயக்குநர் இராமநாதபுரம் அவர்களின் கட்டுப்பாட்டில் இளநிலை தணிக்கையாளராக நியமிக்கப்பட்டேன். கமுதி தொ.வே.கூ வங்கியில் தணிக்கைக்காக 2002, 2003 ஆம் வருடம் நியாய விலைக் கடைகளில் தணிக்கை மேற்கொண்டேன். நான் ஆணையூர் நியாய விலைக்கடையில் தணிக்கை மேற்கண்ட போது ரூ.1,19,890 சரக்கு இருப்பு எதுவும் இல்லை என ரிப்போர்ட் அறிக்கை சமர்ப்பித்தேன். அந்த அறிக்கை அ.த.சா.7 ஆகும். நான் அவ்வாறு தணிக்கை மேற்கொள்ளும்போது அந்த கடையின் வாசுதேவன் என்பவர் விற்பனையாளராக இருந்தார். நான் தணிக்கை மேற்கொள்ளும்போது செல்வராஜ் செயலாளராக இருந்தார். அவர் சரக்கு இருப்பு விற்பனையான பொறுப்பு பதிவேட்டை என்னிடம் கொடுத்தார். அதனை ஆய்வு செய்தபோது 17.03.2004 தேதியிட்ட தனி அறிக்கை நான் (சிறப்பு தனி அறிக்கை) கூ. தணிக்கை உதவி இயக்குநர் இராமநாதபுரம் அவர்களுக்கு சமர்ப்பித்தேன். அந்த சிறப்பு அறிக்கை அ.த.சா.8 ஆகும். என்னை விசாரணை அதிகாரி விசாரணை செய்தார். என்னிடம் காட்டப்படும் 31.03.2006 தேதியிட்ட வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் அ.த.சா.9 ஆகும். போலீசார் இது சம்பந்தமாக விசாரணை செய்தார்கள். நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் கு.வி :-

நான் அந்த துறையில் தணிக்கையாளராக இருக்கிறேன் என்பதை காண்பிக்க அடையாள அட்டை ஏதாவது விசாரணை அதிகாரிகளிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு ஒதுக்கப்பட்ட பணி உத்தரவை விசாரணை அதிகாரியிடம்

கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சென்று தணிக்கை செய்ததில் பற்றாக்குறை இருந்ததில் ஆவணங்களை பார்த்துதான் நான் பற்றாக்குறை இருக்கிறது என்று ஆவணங்களை பார்த்துதான் கூறினேன் என்றால் ஆமாம். எந்த எந்த தேதியில் எவ்வளவு பற்றாக்குறை ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் ஆமாம்.ஒரு வங்கியில் வரவு செலவுகளை அன்றைய தினத்தில் முடித்து காண்பித்து அடுத்த தினம் அந்த நாளுக்குரிய வரவு செலவுகளுக்கு செல்வார்கள் என்றால் ஆமாம். ஒரு வங்கிக்கு சாதாரணமாக ஒரு வருடத்திற்கு எத்தனை முறை தணிக்கை செய்ய செல்வோம் என்றால் வருடத்திற்கு ஒரு முறை செல்வோம். என்னென்ன பற்றாக்குறை நடந்தது என்று நாங்கள் தணிக்கை செய்யும் போது தெரியும் என்றால் ஆமாம். இடைப்பட்ட காலத்தில் என்னென்ன மோசடி நடந்தது என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றால் ஆமாம். என்னை தணிக்கை செய்ய சொல்லி உத்தரவு போட்ட ஆணையை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தணிக்கைக்காக நியாய விலைக்கடைக்கு செல்லவில்லை என்றால் ஆமாம். என்னென்ன பற்றாக்குறைகள் ஏற்பட்டது என்று நான் எழுதிக் கொடுத்தேனா என்றால் ஆவணங்களை பார்த்து நான் அறிக்கை கொடுத்தேன். நான் தணிக்கை செய்த அலுவலகத்தில் யாரால் மோசடி செய்யப்பட்டது என்று என்பவரின் பெயரை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தணிக்கைக்கு சென்றபோது அங்கு செயலாளர் செல்வராஜ் இருந்தார். நான் சரியான முறையில் தணிக்கை செய்யவில்லை என்றாலும் மேல் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க நான் ஒரு பொய்யான அறிக்கையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காவல் துறையினர் என்னை விசாரணை செய்தார்களா என்றால் அழைப்பாணை அனுப்பி அந்த தனி அறிக்கை குறித்து விசாரணை செய்தார்கள். சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் நான் தணிக்கை செய்யவில்லை என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல- அதனால் தான் என்னால் இந்த வழக்கிற்குண்டான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.